வட ஆற்காடு மாவட்டம், புல்லூர் பகுதியில் புதிய அணை கட்டுதல்

திரு. எல். பலராமன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) வட ஆற்காடு மாவட்டம், வாணியம்பாடி தாலுக்கா, புல்லூர் பகுதியில் புதிய அணை ஏதும் கட்ட திட்டமிடப்பட்டதா ?

(இ) ஆமெனில், இவ்வேலையின் தற்போதைய நிலை யாது ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) ஆம்.

(இ) பாலாற்றின் குறுக்கே புல்லூர் கிராமத்தினருகே அமைக்கப்பட விருக்கும் நீர்த்தேக்கத்திற்கு மதிப்பீடும் வரைபடங்களும் பாசனத் தலைமைப் பொறியாளர் அவர்களின் அலுவலகத்தில் பரிசீலனையில் உள்ளன.

திரு. எல். பலராமன் : தலைவரவர்களே, இதற்கு எவ்வளவு தொகை மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது, இதனால் எவ்வளவு ஏக்கருக்குப் பாசன வசதி கிடைக்கும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, இப்போது போடப் பட்டிருக்கின்ற மதிப்பீட்டின்படி ஏறக்குறைய 302 லட்சம் ரூபாய் ஆகலாம் என்று மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது. 30,250 ஏக்கராவுக்கு existing cultivation under palar can be stabilised and additional food production of 15,025 tons கிடைக்கும்.

Match factories at Gudiyatham

* 7 *Q.*—THIRU V. ISVARMURTHI (on behalf of THIRU S. VELLAPANDIAN) : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Government are aware of the closure of many match factories at Gudiyatham; and

(*b*) if so, the details thereof?

குடியாத்தத்தில் உள்ள தீப்பெட்டித் தொழிற்சாலைகள்

திரு. வ. ஈஸ்வர்மூர்த்தி (திரு. எஸ். வெள்ளபாண்டியன் சார்பில்) : மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) குடியாத்தத்தில் தீப்பெட்டித் தொழிற்சாலைகள் பல மூடப்பட்டுள்ளதை அரசு அறியுமா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

1974 சனவரி 19]

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) குடியாத்தம் பகுதியில் 148 தீப்பெட்டித் தொழிற்சாலைகள் உள்ளன. அவற்றில் 2,000-க்குச் சற்று அதிகமான தொழிலாளர்கள் வேலை பார்க்கின்றனர். அவைகளில் 47 தொழிற்சாலைகள் மூடப்பட்டன. அதனால் ஏறத்தாழ 700 தொழிலாளர்கள் வேலையிழந்தனர். அடிப்படை மூலப்பொருள்கள், குறிப்பாக பொட்டாசியம் குளோரேட் கிடைக்காததனாலும், ஆயத்தீர்வை நாடா ஒட்டும் முறை இல்லாததனாலும், மத்திய ஆயத்தீர்வை பணியாளர்கள் ஆயத்தீர்வை விதிகளைக் கண்டிப்பாகச் செயல்படுத்தியதனாலுமே அத்தொழிற்சாலைகள் மூடப்பட்டன என்று கூறப்படுகிறது. வேலையிழந்த தொழிலாளர்கள் அனைவரும், பொதுவாக தற்போது செயல்பட்டு வருகின்ற பெரிய தொழிற்சாலைகளில் வேலையில் அமர்த்தப்பட்டுள்ளனர். எனினும், நிலைமை தற்போது சீரடைந்துள்ளது. மூடப்பட்ட தொழிற்சாலைகள் யாவும் தற்போது மீண்டும் திறக்கப்பட்டுள்ளன.

THIRU G. VASANTHA PAI : Sir, recently we saw a news report that the Central Government were intending to open up all these factories again, by supplying them the necessary chemicals for the purpose of making matches. Are the State Government aware of that move by the Central Government?

THE HON. THIRU S. MADHAVAN : Sir, we have requested the Government of India to see that supply is made to our State, according to requirements. It is not a controlled item. The producer is in Bombay and he has to oblige us. But, now, it has been rectified.

THIRU K. RAJARAM : Sir, may I know from the Hon. Minister whether all the closed factories have now started working?

THE HON. THIRU S. MADHAVAN : Sir, that was what I stated.

திரு. எஸ். வெள்ளபாண்டியன் : தலைவரவர்களே, ராமநாதபுரம் மாவட்டத்தினுடைய தீப்பெட்டிக்குத் தாயகமான சிவகாசியிலே இந்த நிலைமை அடிக்கடி ஏற்படுகிறது. இதைத் தவிர்க்க நம்முடைய தமிழ்நாட்டிலே தீப்பெட்டிக்குத் தேவையான மூலப்பொருட்களைத் தயாரிக்க ஏதேனும் செயற்குறிப்பு அரசிடம் இருக்கிறதா? அதுபற்றி மத்திய அரசிடம் தொடர்பு கொள்ளப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இந்தப் பிரச்சினையைப் பொறுத்த வரையிலே ஆராய்ந்து, அரசாங்கம் நாமே இப்படிப்பட்ட தொழிலைத் தொடங்குவது நல்லது என்று முடிவெடுத்தது. மேற்கு ராமநாதபுரத்திலே இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறவர்களை அழைத்துப் பேசி, அவர்களைப் பங்கு போடச் சொல்லி, அரசாங்கமும் போட்டு, இந்தத் தொழிலில் ஈடுபட்ட ஒருவர், முன்னாள் நாடாளு மன்ற உறுப்பினர், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர் திரு. அய்ய நாடார் என்பவரைத் தலைவராக்கி, 1,825 டன் ஆண்டு ஒன்றுக்கு உற்பத்தி செய்கின்ற, சுமார் ரூபாய் 70 லட்சம் முதல் போடவேண்டிய பொட்டாசியம் குளோரேட் தயாரிக்கும் தொழிற்சாலையை தொடங்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

திரு. எஸ். டி. ஆதித்யன் : தலைவரவர்களே, பொட்டாசியம் குளோரைட் போன்ற மற்ற மூலப்பொருட்களும் இருக்கின்றன. உதாரணமாக பெர்மாங்கனேட், பாஸ்பரஸ் முதலியவை இருக்கின்றன. அவற்றையும் உற்பத்தி செய்வதற்கு ஏதேனும் செயற்குறிப்பு அரசிடம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : புளூ மாட்ச் பேப்பர், மாட்ச் வாக்ஸ், ரெட் பாஸ்பரஸ், பொட்டாசியம் குளோரைட், சல்பர், ஃக்ளூ (Glue) இவைகள் தான் அதில் சம்பந்தப்பட்ட பொருட்கள். இதில் ரெட் பாஸ்பரஸ் கிடைக்காத கஷ்டம் இருக்கிறது என்று போகும்போதெல்லாம் சொல்லுகிறார்கள். அதைத் தொடங்க முடியுமா என்று பரிசிலனை செய்யும்படி இலாக்காவைக் கேட்டுக்கொண்டிருக்கிறோம். அதற்கு மூலப்பொருள் கஷ்டம் என்கிறார்கள்.

திரு. எஸ். ஜெயராம் ரெட்டியார் : தலைவரவர்களே, திரு. அய்ய நாடார் தலைமையில் ஏற்படுத்தப்பட்ட பைராக் சேட் ஒரு வருடத்திற்கு முன்னால் துவங்கப்பட்டது என்று கருதுகிறேன். இப்போது அது எந்த நிலைமையில் செயல்பட்டு வருகிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : சில நாட்களுக்கு முன்னால் அந்த வழியாகப் பார்த்துக்கொண்டு வந்தேன். மேலூர் பக்கத்தில் வாணம் எல்லாம் பிரித்து வெட்டி கட்டிட வேலை தொடங்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

Tuticorin Petro-Chemical Complex

*8 Q.—THIRU V. THANGAPANDIAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) the number of persons employed in the Tuticorin Petro-chemical Complex;